

திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில், டாக்டர் அம்பேத்கர் அவர்களின் 136வது பிறந்த நாளை முன்னிட்டு, அவரது திருவுருவச் சிலைக்கு, பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் செங்கம் மு.பெ.கிரி, இரா.ஸ்ரீதரன், எஸ்.பன்னீர்செல்வம், ப.கார்த்திவேல்மாறன், பிரியா விஜயரங்கன், ஏ.ஏ.ஆறுமுகம், சு.ராஜாங்கம், எஸ். கண்ணதாசன், கிரிக்கெட் ரவி, குணாளன் உட்பட பலர் உள்ளனர்.

### கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தலைமையில்

# அனைத்து ஆட்டோ ஓட்டுநர் சங்க நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## தொ.மு.ச. நிர்வாகிகள் பங்கேற்பு!




சென்னை, ஏப். 16-

தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் தலைமையில், தொ.மு.ச. பேரவைத் தலைவர் மு.நடராசன் முன்னிலையில் "அனைத்து ஆட்டோ தொழிற் சங்க நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்" சென்னை தியாகராயர் நகரில் அமைந்துள்ள தொ.மு.ச. பேரவை தலைமை அலுவலகத்தில் 14.4.2026 அன்று நடைபெற்றது

இக்கூட்டத்தில், சென்னை பெருநகர ஆட்டோ ஓட்டுநர் முன்னேற்றச் சங்க தலைவர், ஐ.சி.எப். துரை, பொதுச்செயலாளர் ஜி.பழனி, பொருளாளர் பி.பன்னீர்செல்வம் தமிழ்நாடு ஆட்டோ தொழிலாளர் சம்மேளனத்தின் மாநிலச் செயல்தலைவரும் - அனைத்து ஆட்டோ தொழிற்சங்க கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளருமான எஸ்.பாலசுப்பிரமணியம், AICUT ஆட்டோ ஓட்டுநர் தொழிற்சங்க செயலாளர் மு.சம்பத், மாநிலப் பொதுச்செயலாளர் பி.மாரியப்பன் தொழிலாளர் விடுதலை முன்னணி மாநிலச் செயலாளர் ஜே.மனோகரன், தே.மு.தி.க. ஆட்டோ தொழிற் சங்க பேரவை பொருளாளர் பி.வேணுராம், SDTU சென்னை மண்டல தலைவர் எச்.முஜ்புல் பாஷா, HMS தொழிற் சங்க சென்னை மண்டல தலைவர் ஆர்.ரமேஷ் உள்ளிட்ட ஏழு தொழிற் சங்கங்களைச் சார்ந்த நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் தொழிற்சங்க நிர்வாகிகளின் கோரிக்கைகளை கேட்டறிந்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சி மீண்டும் அமைந்தவுடன் அனைத்து கோரிக்கைகளையும் தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் மூலம் நிறைவேற்றி தரப்படும் என உறுதி அளித்தார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட அனைத்து தொழிற் சங்க நிர்வாகிகளும் மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு ஆதரவு அளிப்பதாக உறுதியளித்தனர்.

நிகழ்ச்சி முடிவில் அமைப்புச் செயலாளர் ஆர். எஸ். பாரதி அவர்கள் பத்திரிக்கையாளர்களை சந்தித்து நிகழ்வு குறித்து விளக்கமளித்தார்.

# நாடாளுமன்றத் தொகுதி மறுசீரமைப்பு பிரச்சினை: சந்திரபாபு நாயுடுவின் கருத்து என்ன?

கடந்த ஆண்டு மார்ச் மாதம் தமிழகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தென்மாநில முதல்வர்களின் கூட்டத்தைக் கூட்டி நாடாளுமன்றத் தொகுதி மறுசீரமைப்பு குறித்து விவாதித்தார்.

அப்போது சந்திரபாபு நாயுடு "இப்போது அதற்கு என்ன அவசரம்? அந்தச் சமயம் வரும்போது பார்க்கலாம்" என்ற கருத்துபட வெளியில் இருந்து தனது அபிப்ராயத்தை வெளியிட்டு இருந்தார். இது ஏடுகளில் வெளிவந்தது.

இப்போது அவரைத் தவிர எல்லோருடைய கருத்துகளும் நாளேடுகளில் வெளியாகி இருக்கின்றன. தென் மாநிலங்களின் கருத்துகள் ஒரே மாதிரியாக இருக்குமானால் நல்லதல்லவா?

சந்திரபாபு நாயுடுதான் ஒன்றிய பா.ஜ.க. அரசு விழாமல் காக்கும் தூண்களில் ஒன்றாக இருக்கிறார். இப்போது மறுசீரமைப்பு குறித்து அவர் கருத்து சொல்லலாமே!

குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை அமல்படுத்தியதால் தென் மாநிலங்கள் மக்கள் தொகையில் பின்னடைவை பெற்றுவிட்டன. இதனால், தென் மாநில நாடாளுமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கை குறையுமல்லவா?

வட மாநிலங்களுக்கு அந்த நிலை இல்லை, அவை குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை அமல்படுத்தவில்லை!

**சந்திரபாபு நாயுடுவின் கருத்து என்ன?**

**- க. திருநாவுக்கரசு**

# களத்தில் இளைஞர் அணி

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து, கழக இளைஞர் அணி நிர்வாகிகள் வீடு வீடாகச் சென்று, வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டபோது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு.




உசிலம்பட்டி சட்டமன்றத் தொகுதி,
மதுரை தெற்கு மாவட்டம்.




போடிநாயக்கனூர் சட்டமன்றத் தொகுதி,
தேனி வடக்கு மாவட்டம்.




உளுந்தூர்பேட்டை சட்டமன்றத் தொகுதி,
கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம்.




நிலக்கோட்டை சட்டமன்றத் தொகுதி,
திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்.




ஆத்தூர் சட்டமன்றத் தொகுதி,
திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்.




ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதி,
திண்டுக்கல் மேற்கு மாவட்டம்.




பல்லடம் சட்டமன்றத் தொகுதி,
திருப்பூர் மத்திய மாவட்டம்.




கூடலூர் சட்டமன்றத் தொகுதி,
நீலகிரி மாவட்டம்.




சூலூர் சட்டமன்றத் தொகுதி,
கோவை தெற்கு மாவட்டம்.